# மட்டு. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு அம்பிட்டிய தேரரை அழைத்துக் கேளுங்கள்!



## பிள்ளையானிடம் மனோ கோரிக்கை

அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் விவகாரம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தவிசாளர் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன் (பிள்ளையான்) நேரடியாக இன்று நான் உரையாடியுள்ளேன் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"மட்டக்களப்பு அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், "தென்னிலங்கைத் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன்" என்று நடுத்தெருவில் கூச்சல் எழுப்பியமைக்கு எதிராக சட்டம் - ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் நடவடிக்கை எடுப்பார் என நம்புகின்றேன். சுமன ரத்ன தேரர், அவர் தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, பகிரங்கமாக இனவாத, வன்முறை கருத்துகளைக் கூறி, மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆகவே, அடுத்து நடைபெறவுள்ள உங்களது மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு, அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு அதிகார பூர்வமாக அழைப்பு விடுத்து, அவரது தரப்பையும் கேட்டு, அதில் ஏதும் உண்மை உள்ளதா? இல்லையா? என்ற விபரங்களை முழு நாட்டுக்கும் தெரியப்படுத்துங்கள் என மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தவிசாளர் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் (பிள்ளையான்) நான் நேரடியாகத் தெரிவித்துள்ளேன்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை 31.10.2023 கதிர் 103

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## கிளிநொச்சி வைத்தியசாலையில் திடீர் விபத்து விழிப்புணர்வு நிகழ்வு





(புகைப்படங்கள் சித்திரிக்கப்பட்டவை)

வைத்தியசாலைகளை எப்பொழுதும் தயார் நிலையில் வைத்திருத்தலின் அவசியம் தொடர்பான திடீர் விபத்து விழிப்புணர்வு நிகழ்வு கிளிநொச்சி வைத்தியசாலையில் இன்றைய தினம் செயல் முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2 ➤



சுமந்திரனும் பங்கேற்பு

## ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழு சம்பந்தனைச் சந்தித்து முக்கிய பேச்சு!

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை இன்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டனர்.

தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்ற தமிழ்த் தேசியப் பிரச்சினை, நில அபகரிப்புக்கள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னமும் இரத்துச் செய்யப்படாமல் இருப்பது போன்ற பல விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டன. (அ)

## தினேஷ் ஷாஃப்டரின் மரணத்திற்கான உண்மைக் காரணம் நாளை வெளியாகும்

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாஃப்டரின் மரணத்திற்கான உண்மையான காரணத்தை கண்டறிய நியமிக்கப்பட்ட நீதித்துறை அதிகாரிகள் அடங்கிய ஐவர் அடங்கிய நிபுணர் குழு, பிரேத பரிசோதனை அறிக்கையை கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, குறித்த தொழிலதிபரின் மரணத்திற்கான காரணம் குறித்து நீதிமன்றம் நாளை தீர்ப்பை அறிவிக்க உள்ளதாக அறிவித்துள்ளது. (த)

## அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் அரிசி விற்கும் விற்பனையாளர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கை!

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்கும் விற்பனையாளர்கள் மற்றும் இருப்புக்களைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அவசர தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி , 1977 என்ற ஹொட்லைன் மூலம் புகார்களைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அத்தகைய விற்பனையாளர்களைத் தேடி அதிகாரசபை சோதனைகளையும் ஆரம்பித்துள்ளது.

அரிசியின் மீது விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் விலைக் கட்டுப்பாட்டின் படி சிவப்பு அல்லது வெள்ளை நாட்டு அரிசி

2 ➤

## மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணத்தை திருத்துவதற்கு

### அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது!

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளின்படி அமைச்சர்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மின்சாரம் வழங்குவது தொடர்பான பொதுக் கொள்கை வழிகாட்டலைத் தயாரிக்கும் அதிகாரம் மின்சார விநியோகத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. .

அதன்படி, தற்போதுள்ள பொதுக் கொள்கை வழிகாட்டுதல்களின்படி, ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் மின் கட்டண மறு ஆய்வு செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும், அதன் பிரகாரம் செயற்படுவதால் பொதுமக்கள் எதிர்கொள்ள வேண்டிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டுப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சக்தி மற்றும் ஆற்றல் தொடர்புடைய மறு

2 ➤

## சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மருந்து அரச அதிகாரிகள் உட்பட மூவருக்கு பயணத் தடை!

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் நிறுவனத்தின் உரிமையாளருக்கும், குறித்த மோசடிச் செயலில் ஈடுபட்ட அரச உயர் அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் வெளிநாட்டுப் பயணத் தடை விதித்துள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல தயாராகி வருவதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் பிரேரணை மூலம் முன்வைத்த உண்மைகளை கருத்திற்கொண்டு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றினால் குறித்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாத தொடக்கத்தில், உரிய நடைமுறையை மீறி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு

2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழ் பல்கலை மாணவர்கள் கடும் எதிர்ப்பு! சுவஸ்திகாவின் கருத்தரங்கு நிறுத்தம்



மாணவர்களின் எதிர்ப்பையடுத்து சர்சைக்குரிய சட்டத்தரணி சுவஸ்திகாவின் கருத்தரங்கு நிறுத்தப்பட்டது.

இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையினரின் ஏற்பாட்டில் சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் வளவாளராக பங்குபற்றும் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கடுமையான எதிர்ப்பினையடுத்து குறித்த கருத்தரங்கு இடைநிறுத்தப்பட்டது.

அண்மையில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றிய சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பாசிச அமைப்பு என தெரிவித்திருந்தார்.

இவரது கருத்திற்கு பல்வேறு தரப்புகளும் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில், இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் சட்டத்தரணி சுவஸ்திகா பங்குபற்றலுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு, மாணவர்கள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதையடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (01)

# டயனா கமகேவுக்கு எதிரான வழக்கு மன்றால் தள்ளுபடி

சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை இன்று தள்ளுபடி செய்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் பிரித்தானியக் குடியுரிமையைப் பெற்றிருப்பதால், அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் எனத் தெரிவித்து சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (அ)

## சட்டவிரோதமாக இறக்குமதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செய்யப்பட்ட மனித நரம்பு வழி இம்யூனோகுளோபுலின் ஒரு தொகுதி பயன்பாட்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டதாக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, போதைப்பொருளை இறக்குமதி செய்யும் போது சுங்க அனுமதிக்காக போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டதாகவும் அது பின்னர் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகவும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் எஸ்.டி. ஜயரத்ன ஓர் ஊடக அறிக்கையில் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் 22 மற்றும் செப்டம்பர் 16 ஆகிய திகதிகளில் முறையே கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பல நோயாளிகளுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டதன் பின்னர் ஒவ்வாமை எதிர்வினைகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து நிலைமை வெளிச்சத்திற்கு வந்ததாக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் கூறியுள்ளது.

இதற்கிடையில், பொது கணக்குகள் குழுவால் நியமிக்கப்பட்ட துணைக்குழு, சுகாதார அமைச்சின் தகவல் மேலாண்மை அமைப்பு குறித்து முறையான ஆய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அறிவுறுத்தியுள்ளது. (த)

## மூன்று மாதங்களுக்கு ஒருமுறை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுக் காலத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை திருத்த ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வாறாக, இலங்கை மின்சார சபையின் மின் விநியோகத் தணிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் உதவியுடன் நீர்மின்சார முன்னறிவிப்பை வலுப்படுத்துவதற்கும் அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த)

## அதிகபட்ச சில்லறை விலைக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டையும் 100 ரூபாய்க்கு மேல் விற்க முடியாது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி கீரி சம்பாவின் அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாகவும் , சம்பா அரிசி கிலோ ஒன்றின் விலை 230 ரூபாவாகவும் , மற்றும் சிவப்பு அல்லது வெள்ளை பச்சை அரிசி கிலோ ஒன்றின் விலை 210 ரூபாவாகவும் விற்பனை செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான பல்பொருள் அங்காடிகள் மற்றும் லங்கா சதொச விற்பனை நிலையங்களில் ஏறக்குறைய ஒரு மாத காலமாக கீரி சம்பாவின் தயாரிப்பு கிடைக்காத நிலையில், உள்ளூர் சந்தையில் கீரி சம்பாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமடுச் சந்தியிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலை வரை நோயாளர்கள் பல வாகனங்களில் வைத்தியசாலைக்கு கொண்டுவருவது போல சித்திரிக்கப்பட்டு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில், இராணுவத்தினர், பொலிசார், மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் எனப் பலரும் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

திடீர் விபத்து ஏற்படும் போது எவ்வாறு முன்னாயத்தங்கள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும், என்பது தொடர்பாக விழிப்புணர்வுச் செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (02)

## மட்டு. ஒருங்கிணைப்புக் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.சி.சி.பி.ஆர். என்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் 3 (1) உறுப்புரையில், எந்தவொரு நபராலும் யுத்தத்தைத் தூண்டவோ, வேறுபடுத்தும் விதத்தில் எதிர்வாதம் புரியவோ அல்லது வன்முறைகளில் ஈடுபடுவதோ, ஒன்று திரளுவதோ, இன, மத குரோதங்களை முன்னெடுப்பதோ கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் பலர் கைது செய்யப்பட்டு சிறைவாசங்களுக்கும், வழக்குகளுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

ஆனால், பல்லாண்டுகளாக மேலாக பொது வெளியில் இனவாத கருத்துக்களைக் கூறியும், வன்முறைளில் ஈடுபட்டும் வரும் அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் மீது இந்தச் சட்டம் இன்னமும் பாயவில்லை. இந்தச் சட்டத்திலிருந்து இவருக்கு இனிமேல் விலக்கு வழங்க முடியாது. இனி இது முடிவுக்கு வர வேண்டும். இவரது பாரதூரமான இனவாத கருத்துக்களுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டம் - ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் மூலம் நடவடிக்கை எடுப்பார் என நான் நம்புகின்றேன்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்றுமுன்தினம் என்னுடன் உரையாடியுள்ளார். அதேபோல், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி. சிறிகாந்தாவுடன் நான் உரையாடினேன். தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, தேரர் பகிரங்கமாகக் கூறியுள்ளமை தொடர்பாக உண்மையைக் கண்டறியுமாறு அவருக்கு அறிவுறுத்தியுள்ளேன். இதுவே முறைப்படி செய்யப்பட வேண்டிய காரியம் என நினைக்கின்றேன்.

தனது இனவாதக் கருத்துகள் தொடர்பில் தேரர் மீது ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அது வேறு விடயம். அது சட்டம் - ஒழுங்கு அமைச்சரின் பொறுப்பாகும்.

தேரரது தாயின் கல்லறை உடைக்கப்பட்டிருந்தாலும்கூட, அது தொடர்பில் முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தமிழர்களை குறிப்பாக தென்னிலங்கைத் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் எனத் தேரர் கூற முடியாது. இதை இனிமேல் எம்மால் அனுமதிக்க முடியாது. தான் ஏதும் பிரச்சினையை எதிர்கொண்டால், அதற்கு தீர்வைத் தேட முறைப்படியான மாற்று வழி இருப்பது தேரருக்கு விளங்க வேண்டும்." - என்றார். (அ)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

விற்பனையாளர் தேவை
**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# திருக்கோவிலில் பனை விதைகள் நடும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் பனை விதைகள் நடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த வேலைத்திட்டமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டமானது பனை சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள பனைசார்ந்த உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதியாக பனை அபிவிருத்தி சபையினால் 75,000 ரூபா ஒதுக்கப்பட்டிருகின்றது.

குறித்த வேலைத்திட்டத்திற்கான ஆரம்பகட்ட நிகழ்வு தம்பட்டை 1 ,2 பகுதிகளில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் க. சதிசேகரன், பனை அபிவிருத்திச் சபையின் மட்டு அம்பாறை மாவட்ட முகாமையாளர் ரி.விஜயன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தினை திருக்கோவில் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உசாந்தின் ஆலோசனைக்கு அமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சு. ரவீந்திரன் ஒழுங்குபடுத்தியிருந்தார்.







# அல் இம்ரான் கிரிக்கட் சுற்றுப் போட்டியில் கலேவெல விளையாட்டுக் கழகம் சம்பியன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கலேவெல அல் இம்ரான் விளையாட்டுக் கழகம் நடாத்திய அல் இம்ரான் சவால் கிண்ண கிரிக்கட் சுற்றுப் போட் டியில் கலேவெல விளையாட்டுக் கழகம் சம்பியனானது

கலேவேல நிதிகம விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கலேவெல விளையாட்டுக் கழகத்திற்கு சம்பியன் கிண்ணமும் 30,000 ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடம்பெற்ற கணேவல்பொல யூத் விளையாட்டுக்கழகத்திற்கு கிண்ணமும் 15,000 ரூபாய் பணப்பரிசும் ஏற்பாட்டாளர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் பேய் வீடு அனுபவம்!




யாழ்ப்பாணத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் பேய் வீடு ஒன்று உருவாக்கப்பட்டு வருவதாகவும் அந்த வீட்டினுள் சென்று திகில் அனுபவங்களை பெறத் தயாராகுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தனர்.

வடமாகாணத்தில் முதல் தடவையாக யாழ்ப்பணத்தில், “Artistic Event Management” ஏற்பாட்டில் திகில் வீடு ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த வீட்டினுள் சென்று திகில் அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணம் நகருக்கு அருகில் ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்திற்கு அருகிலேயே இந்த திகில் வீடு உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த வீட்டினுள் எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 11 மணி வரையில் செல்ல முடியும்.

ஒலி, ஒளி அமைப்புக்களுடன் மிக பிரமாண்டமாக இந்த வீடு உருவாகி வருகிறது. பேய்ப் படங்களைப் பார்க்கும்போது ஏற்படும் திகில் அனுபவங்களை இந்த வீட்டினுள் சென்று திரும்பும்போது நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம் வீட்டினுள் சுமார் 30 நிமிடங்கள் ஒவ்வொருவரும் செலவிட முடியும். அந்த 30 நிமிடங்களும் பல்வேறு வகையான திகிலான அனுபவங்களை உணரலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 800 பேர் வரையிலேயே வீட்டுக்குள் அனுமதிக்கக் கூடிய நிலைமைகள் காணப்படுவதனால் நுழைவுச் சீட்டுக்களை முன்பதிவு செய்து கொள்வது சிறந்தது என்றும், நுழைவு சீட்டானது ஆளொருவருக்கு 750 ரூபாய் ஆகும். அதனைப் பெற்றுக்கொள்ள 0776016344 மற்றும் 0772018833 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை திகில் வீட்டுக்கு வெளியே உணவுத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகவும், அத்துடன் முகங்களில் படங்களை வரைந்து கொள்ளவும், செல்பி எடுப்பதற்கான சிறப்பு அறையில் படம் எடுத்து மகிழக் கூடியவாறான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாகவும், அவற்றுக்கான கட்டணங்கள் தனியானதாக அமையுமெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த திகில் வீட்டுக்கு 10 வயதுக்கு குறைவானவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், இதய நோய் உள்ளவர்கள் வருவதை தவிர்த்துக் கொள்வது நல்லது எனவும், ஏனெனில் இது மிகப் பிரமாண்டமான முறையில் திகிலை ஏற் படுத்தக் கூடியவகையில் உருவாகி வருகின்றன எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



## காஸாவில் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இளம்பெண் ஜெர்மனியைச் சேர்ந்தவர் என தகவல்



காஸாவில் இளம்பெண் ஒருவர் கடத்தப்பட்டு ஆடைகளின்றி ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள காணொளி இணையத்தில் வைரலாகியது.

கொலை செய்யப்பட்ட இளம்பெண் இஸ்ரேல் படையைச் சேர்ந்தவர் என ஹமாஸ் தரப்பில் கூறப்பட்டிருந்த நிலையில், அவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர் என்பதை இஸ்ரேல் அரசு உறுதிப்படுத்தியுள்ளது. ஹமாஸ் படையினர், தங்கள் வாகனத்தில் ஆடைகளின்றி இளம் பெண் ஒருவரை ஊர்வலமாக அழைத்து வரும் விடியோ இணையத்தில் கடந்த சனிக்கிழமை முதல் வைரலானது.

அதில் அப்பெண்ணைச் சுற்றிலும் ஹமாஸ் படையினர் சூழ்ந்து கூச்சலிடுவதும், உடலில் எச்சில் துப்புவதுமான செயல்களில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த விடியோ வைரலானதைத் தொடர்ந்து, குறித்த பெண் இஸ்ரேல் ராணுவத்தைச் சேர்ந்தவர் என ஹமாஸ் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், கொலை செய்யப்பட்ட இளம்பெண் ஜெர்மனியைச் சேர்ந்தவர் என இஸ்ரேல் அரசு உறுதிப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் காஸா எல்லையில் அமைதி நிலவ வலியுறுத்தி நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்க இஸ்ரேலுக்கு வருகை புரிந்துள்ளார் ஷானி லோவுக். 30 வயதான இவர், டட்டூ கலைஞர். இசை நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த அவரை ஹமாஸ் படையினர் கடத்தியுள்ளனர்.

கடத்தப்பட்ட இளம்பெண் இஸ்ரேல் ராணுவத்தைச் சேர்ந்தவர் என ஹமாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், உயிரிழந்தவர் ஷானி லோவுக் என்றும் அவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர் என்றும் இஸ்ரேல் உறுதிப்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஷானி லோவுக்கின் தாயார் மற்றும் சகோதரியின் சமூகவலைதள பதிவும் வெளியாகியுள்ளன.

அந்த வீடியோவில் இருப்பது தனது மகள், என்றும் அவரின் உடலில் இருக்கும் டட்டூக்களையும் அவரது தாயார் ஆதாரமாகக் குறிப்பிடுகிறார். தனது மகளின் உடலையாவது ஒப்படைக்கும்படி ஹமாஸ் படையினருக்கு கோரிக்கை வைக்கும் தாயாரின் விடியோ தற்போது வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ஷானி லோவுக் சகோதரி அதி லோவுக் வெளியிட்டுள்ள பதிவில், இது என் சகோதரி ஷானி லோவுக். ஹமாஸ் படையால் கடத்தப்பட்டார். அவர் ஜெர்மன் குடியுரிமை பெற்றவர் எனக் குறிப்பிட்டுள்ளார். (04)

## கசகஸ்தான் நிலக்கரிச் சுரங்க தீ விபத்தில் 42 பேர் உயிரிழப்பு



மத்திய ஆசிய நாடுகளில் ஒன்றான கசகஸ்தானின் காரகண்டா பகுதியில் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கம் அமைந்துள்ளது. இந்த நிலக்கரிச் சுரங்கத்தில் எதிர்பாராத விதமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அப்போது அங்கு 250 க்கும் மேற்பட்டோர் பணியில் இருந்துள்ளனர்.

தீயானது விரைந்து அப்பகுதி முழுவதும் பரவியது. இந்த விபத்தில் சிக்கி 42 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து தீவிபத்து குறித்து விசாரணை நடத்த கசகஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. மெதேன் வாயுக் கசிவால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தக் கோர விபத்தையடுத்து கசகஸ்தானில் ஒக்டோபர் 29 ஆம் திகதி துக்க தினமாக அனுசரிக்கப்பட்டுள்ளது. (04)



## நைஜீரியாவில் மீண்டும் படகு விபத்து 17 பேர் இறப்பு - 73 பேரைக் காணோம்!

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஆற்று வழியாகச் சென்று கொண்டிருந்த பயணிகள் படகு கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்துள்ளதோடு 73 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் அர்டோ - கோலா மாகாணத்தில் பென்யூ நதி வழியாக நூற்றுக்கும் மேற்பட்டோரை ஏற்றிக் கொண்டு சனிக்கிழமை சென்றுகொண்டிருந்தபோது அந்தப் படகு திடீரெனக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

விபத்துப் பகுதியிலிருந்து 14 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். காணாமல் போயுள்ள 73 பேரைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அவர்கள் உயிர்பிழைத்திருப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பதால் இந்த விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 90 ஐ நெருங்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நைஜீரியாவில் போதிய சாலை வசதிகள் இல்லாததால் அங்கு நீர்வழிப் போக்குவரத்து அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இருந்தாலும், அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வது, போதிய பராமரிப்பு இல்லாதது போன்ற காரணங்களால் அங்கு அடிக்கடி படகு விபத்துகள் ஏற்படுகின்றன.

அண்மைய நாட்களில் ஏற்பட்டுள்ள மூன்றாவது பெரிய விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது. (04)



## இஸ்ரேல் - ஹமாஸ் யுத்த நிறுத்த வாக்கெடுப்பு இந்தியா பங்கேற்காததற்கு சோனியா கண்டனம்

### சோனியாவுக்கு பா.ஜ.க.வினர் பதிலடி!

இஸ்ரேல் ராணுவம் மற்றும் காஸாவின் ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கு இடையிலான போரை நிறுத்தக் கோரிய ஐ.நா. தீர்மானம் மீதான பொது வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்காமல் தவிர்த்ததற்கு காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழில் அவர் எழுதியுள்ள கட்டுரையில், இஸ்ரேல் தனது பலத்தை ஏதுமறியாத, யாரும் உதவிக்கு வராத மக்கள் மீது பயன்படுத்துகிறது. இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் எந்த அளவுக்குக் கண்டிக்கத்தக்கதோ, அதே அளவுக்கு இப்போது மக்கள் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும் கண்டிக்கத்தக்கது.

பாலஸ்தீன மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களது அமைதியான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பது காங்கிரஸின் நிலைப்பாடாக உள்ளது. உரிய நீதி இல்லாமல் அமைதி கிடைக்காது.

தண்ணீர், மின்சாரம், உணவு என எதுவும் பாலஸ்தீன மக்களுக்கு கிடைக்கவிடாமல் செய்வது மனிதாபிமானமற்ற செயல் மட்டுமல்ல, சர்வதேச விதிகளுக்கும் எதிரானது

ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்தத் தீர்மானத்தில் வாக்களிக்காமல் இந்தியா விலகி நின்றதை காங்கிரஸ் கடுமையாகக் கண்டிக்கிறது. பாலஸ்தீன மக்களின் உரிமைகள் குறித்து பேசாத நமது பிரதமர், இஸ்ரேல் பக்கம் உறுதியாக நிற்பதாக மட்டும் கூறி வருகிறார்' என்று சோனியா குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர் சுதான்சு திரிவேதி கூறுகையில், இதற்கு முன்பு சோனியா காந்தி எந்த சர்வதேசப் பிரச்சினை குறித்து நாளிதழில் கட்டுரை எழுதினார் என்று யாராவது கூற முடியுமா? அவரது இப்போதைய திடீர் கட்டுரைக்குக் காரணம், காங்கிரஸின் வழக்கமான வாக்கு வங்கி அரசியல் மட்டும்தான்.

பயங்கரவாதச் செயல்பாடுகள், சர்வதேச விவகாரங்களில் உள்ளூர் அரசியலை நடத்தக் கூடாது என்பதில் பா.ஜ.க .தெளிவாக உள்ளது. பயங்கரவாதம் எந்த வகையில் தலைதூக்கினாலும் அதை ஒழிக்க வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு.

நாட்டின் மதிப்பு, கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்பதில் காங்கிரசுக்கு அக்கறை கிடையாது. வாக்கு வங்கியைத் தக்க வைக்க வேண்டும் என்பது மட்டுமே காங்கிரஸின் நோக்கம். இப்போது இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு எதிரான செயல்களில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது, என்று தெரிவித்திருக்கிறார். (04)

# சம்மாந்துறை பிரதேச வயல் நிலங்களுக்கு ஆற்றுவாழைகள் ஆக்கிரமிப்பால் சிக்கல்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட வயல் நிலங்களுக்கு பெரும் போக நெற்செய்கைக்கு ஆற்றுவாழைகளின் ஆக்கிரமிப்பினால் நீர் வழங்குவதில் பாரிய சிக்கல் நிலை உருவாகியுள்ளது.

சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள அனேகமான ஆறுகளிலும் குளங்களிலும் வாய்க்கால்களிலும் ஆற்றுவாழைகளின் அதீத பெருக்கத்தினால் வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதில் பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது அதிகமான வயல் நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான உழும் வேலைகளும் விதைப்பு வேலைகளும் மும்முரமாக இடம்பெறுகையில் சில வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்ச முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

ஆற்றிலிருந்து வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும் பகுதியில் நீர்க்களைகள் வளர்ந்து காணப்படுவதால் நீர்ப்பாய்ச்சும் வேகம் குறைந்துள்ளதாகவும் இதனால் விதைப்பு வேலைகள் தாமதமடைவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## வட மாகாண பூப்பந்தாட்ட போட்டித் தொடர் கிளிநொச்சி உள்ளக அரங்கில் ஆரம்பமானது

வட மாகாண பூப்பந்தாட்ட போட்டித் தொடர் இன்று ஆரம்பமானது. இந்தப் போட்டிகள் இன்று முதல் 5 நாட்களுக்கு இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த போட்டியின் ஆரம்ப நிகழ்வு வடமாகாண பூப்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள உள்ளக அரங்கில் ஆரம்பமான குறித்த ஆரம்ப நிகழ்வில் கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகவும் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது வருகை தந்த அதிதிகளுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கிவைக்கப்பட்டன. (02)

## அகில இலங்கைத் தமிழ் மொழித் தினத் தேசிய போட்டிகளில் சம்மாந்துறைக்கு இரண்டு தங்கம்





(வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினத் தேசிய மட்டப் போட்டியில் சம்மாந்துறைக்கு இரண்டு முதலிடங்கள் கிடைத்துள்ளன.

இவ்வருடத்துக்கான அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஐந்தாம் பிரிவு இலக்கிய விமர்சனப் போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மாணவி அல் - ஹாபிழா ஏ.தபானி அபா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் ஐ.எல்.அமீனுத்தீன், ஏ.எல்.றாஜிதா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வி ஆவார். போட்டிக்கான நெறிப்படுத்தலை ஆசிரியர் எம்.ஐ.அச்சி முகம்மட் மேற்கொண்டிருந்தார்.

அதேவேளை, முதலாம் பிரிவு வாசிப்புப் போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலய மாணவன் என்.றுஹைமி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் ஏ.பி. நௌபீல், எம்.வை. சாமிலா ஆகியோரின் இரண்டாவது புதல்வன் ஆவார். போட்டிக்கான நெறிப்படுத்தலை ஆசிரியை பௌமியா மேற்கொண்டார்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான தங்கப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுப் பணிப்பாளர் சு.முரளிதரன் வழங்கி வைத்தார்.




## பாடசாலைகளுக்கான காணி உறுதிப் பத்திரம்



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி மற்றும் அல்-மினாரா வித்தியாலயத்திற்கான காணி உறுதி பத்திரம் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபீரினால் அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம். ரஹ்மத்துல்லாஹிடம் காணிக்கான உறுதிப் பத்திரம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காணி உத்தியோகத்தர் எம்.ஐ.முகம்மட் றியாத், விடயத்துக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் பழீல் சரபியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## நெடுந்தீவில் பூட்டிய வீடொன்றில் இளைஞன் சடலமாக கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் – நெடுந்தீவு பகுதியில் வீடொன்றில் தனிமையில் இருந்த இளைஞன், நேற்று (30) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நெடுந்தீவு மேற்கை சேர்ந்த 25 வயதுடைய குணராசா தனுஷன் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞனின் உறவினர்கள் வெளியூரில் வசிக்கும் நிலையில் அவர்களின் வீட்டினை இளைஞனே பராமரித்து வருவதுடன் , வீட்டின் பாதுகாப்புக்காக அந்த வீட்டில் தங்கியும் இருந்துள்ளார்.

குறித்த இளைஞனின் வீடு அருகில் உள்ளதால், தனது வீட்டிற்கு உணவுக்காக சென்று வரும் நிலையில், நேற்று உணவருந்த இளைஞன் வராததால், வீட்டார் இளைஞனை தேடி சென்றபோது, பூட்டிய வீட்டினுள் படுக்கையில் இளைஞன் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (01)



## கொடிகாமம் - பருத்தித்துறை பேருந்து தரம்புரண்டு விபத்து

யாழ்ப்பாணம், கொடிகாமம் - பருத்தித்துறை இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தொன்று இன்று காலை நெல்லியடிப் பகுதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்கு காரணம் என பொலிஸாரின் முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தின் போது பேருந்தில் குறைந்தளவான பயணிகள் பயணித்துள்ளனர்.

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை நெல்லியடி முள்ளிப் பகுதியில் குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற நிலையில் அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் பேருந்தில் இருந்தவர்களை பாதுகாப்பாக மீட்டனர். விபத்தின் போது பெரியளவில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து குறித்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (01)

## அறநெறிப் பாடசாலைகளுக்கு கதிரைகள் வழங்கி வைப்பு



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கான கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வானது பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது தேசிய உறவுகள் நலன்புரிச் சங்கத்தால் 8 அறநெறிப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் மாணவர்களின் நலன் கருதி 250 கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், இந்து கலாசார உத்தியோகத்தர் மற்றும் நலன்புரி அமைப்பின் ஊழியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



## “பிரஜா கரசர” தேசிய விருது

(ஹஸ்பர்)

கொழும்பில் நடைபெற்ற சமுர்த்தி “பிரஜா கரசர” தேசிய விருது வழங்கல் நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் பிரதேச சமுதாய அமைப்பு மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும், புகைத்தல் எதிர்ப்பு கொடி விற்பனையில் சிராஜ் நகர் சமுதாய அடிப்படை அமைப்பு மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும் பெற்று தேசிய மட்ட விருது வழங்கலில் விருதுகளைப் பெற்றுள்ளன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் விருதுகளை பெற்ற உத்தியோகத்தர்கள் நேற்று பிரதேச செயலகத்தில் வைத்துப் பாராட்டப்பட்டனர்.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இந்தியர்கள் 42,000 பேர் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக இவ்வாண்டில் நுழைவு



அமெரிக்காவில் கடந்த ஓராண்டில் மட்டும் 42,000 இந்தியர்கள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சட்டவிரோத நுழைவு தொடர்பாக நியூயோர்க்கின் த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் என்ற பத்திரிகை நிறுவனம் வெளியிடுள்ள தரவுச் செய்தியில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தத் தரவுகளின்படி, அமெரிக்காவில் சட்டவிரோதமாக நுழைந்த இந்தியர்களின் எண்ணிக்கை கடந்த நிதியாண்டை விட இந்த நிதியாண்டில் இரு மடங்கு அதிகரித்துள்ளது.

இதில், பெரும்பாலானோர் புகலிடம் தேடி அமெரிக்காவுக்கு வருவதாகவும், இதற்கு முன்பு அமெரிக்காவில் சட்டவிரோதமாக நுழைந்து வேலை செய்து வருவோரின் தூண்டுதலின்பேரில் அதேபோன்று நுழைந்து வேலைவாய்ப்புகளைப் பெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லையைக் கடந்து நுழைய வெளிநாட்டுப் பயண முகவர்களும் போதைப்பொருள் கடத்துபவர்களும் குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு உதவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஒக்டோபர் மாதம் வரையில், சர்வதேச அளவில் எல்லையைக் கடந்து சட்டவிரோதமாக நுழைந்ததாக 2 மில்லியன் மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன. (04)



# திவுலபத்தனையில் இருந்து சிங்களவர்களை விரட்ட முயற்சியா? சிங்களவர்கள் இப்பகுதிகளில் வசித்தமைக்கு சான்றுகள் உள்ளன!

## பேராசிரியர் நளின் டி சில்வா அறிக்கையூடாக ஆதங்கம்



சிங்களவர்கள் அல்லாதவர்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் குடியேறுவதற்கு எந்தத் தடையும் இல்லையெனவும், ஆனால், வடக்கு - கிழக்கில் இனவாத தமிழ் அரசியல்வாதிகளின் செல்வாக்கு காரணமாக சிங்கள மக்களின் வாழ்வுரிமை தடைபடுவது மிகவும் சோகமான நிலை என பேராசிரியர் நளின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் சில இடங்களில் தடைகள் போடப்பட்டு மக்கள் மீளமுடியாத வகையில் ஒடுக்கப்படுவதாகவும் முப்பது வருடகால யுத்தத்தினால் வென்ற தாய்நாடு மீண்டும் அராஜகமாகியுள்ளமை துரதிஷ்டவசமானது எனவும் அறிக்கையொன்றை விடுத்துள்ள பேராசிரியர் நளின் டி சில்வா, இவ்வாறான கட்டுப்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பொறுப்புவாய்ந்தவர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அறிக்கையில், சில தினங்களுக்கு முன்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து புத்தர் சிலையை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பகுதியில் சிங்களவர்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் நெல் பயிரிட்டு வாழ்வாதாரம் பெற்று வந்தனர்.

தமிழ்ப் புலிகளின் படையெடுப்பின் போது அவர்கள் அங்கு தங்கியிருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அது அப்போது எல்லைக் கிராமம் என்று அழைக்கப்பட்டது. கிராமத்தின் பெயர் திவுலபத்தன, மாவட்டம் மட்டக்களப்பு. அங்கிருந்த ஆலயம் வெஹரகொடெல்ல ரஜமஹா விகாரை ஆகும். இந்தப் பெயர்களில் இருந்த அந்த ஊர்களும் பெயர்களும் கூட இன்னும் தமிழாக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

தமிழ் புலிகளால் சிங்களவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறினர், ஆனால் 2010 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவினால் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அந்த சிங்களவர்களும் அவர்களின் வழித்தோன்றல்களும் அவரது பணிப்பின் கீழ் மீண்டும் அங்கு குடியேறினர். இவர்கள் புதிதாக குடியேற்றப்பட்டவர்கள் அல்ல. அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர், அந்த ஆலயத்தில் புத்தர் சிலை மீண்டும் வைக்கப்பட்டது. ஆனால், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் கேட்டுக் கொண்டதன் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூலம் இராணுவத்தினரும் பொலிஸாரும் அந்த புத்தர் சிலையை அகற்றியுள்ளனர்.

திபுலபதானில் சுமார் நானூற்று ஐம்பது சிங்களக் குடும்பங்கள் வசிப்பதாக அறியப்படுகிறது. அவர்களில் பெரும்பாலானோர் பௌத்தர்களாக இருந்திருக்க வேண்டும். ரணில், இராசமாணிக்கம் போன்றவர்கள் புத்தர் சிலையின் பெயரை நீக்கி சிங்கள பௌத்தர்களின் வழிபாட்டு உரிமையைப் பறிக்க முடியுமா?

இந்த நடவடிக்கை திவுலபத்தானயில் இருந்து சிங்களவர்களை வெளியேற்றுவதற்கான முதல் படியாக இருக்கலாம். கிழக்கு மாகாணத்திலுள்ள பௌத்த விகாரைகளை பாதுகாக்க ரணில் செயற்படமாட்டார் என்பது தெளிவாகின்றது. தமிழ் பௌத்தர்கள் என்று சொல்லப்படுபவர்களைப் பற்றி அவர் கூறிக் கொண்டிருக்கின்றார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முதல் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த கார்த்திகேசு இந்திரபாலா, லண்டன் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த முனைவர் பட்ட ஆய்வறிக்கையில் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்நாட்டில் தமிழ் பௌத்த குடியேற்றங்கள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பௌத்தர்கள் இந்நாட்டில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என்பதற்கான ஆதாரங்களை முன்வைக்க யாரேனும் முன்வந்தால் அதற்கு பதிலளிக்க கார்த்திகேசு இந்திரபாலாவின் ஆய்வுக்கட்டுரையின் பிரதி என்னிடம் உள்ளது. ஜனாதிபதி அல்லது ராசமாணிக்கம் ஆகியோருக்கு தேவையாயின் அதனை வாசித்துப் பார்க்க முடியும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ரெ-23)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் பிக் மீ வண்டிச் சாரதி மீது தரிப்பிடச் சாரதிகள் தாக்குதல்!



யாழ்ப்பாணத்தில் பிக் மீ செயலி ஊடாக தனக்கு கிடைக்கப்பெற்ற கோரிக்கைக்கு அமைய சேவை பெறுநரை ஏற்றச் சென்ற முச்சக்கர வண்டிச் சாரதி மீது, தரிப்பிடச் சாரதிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தாக்குதலுக்கு இலக்கான சாரதி யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் நின்று ஒருவர் “பிக் மீ “ செயலி ஊடாக முச்சக்கர வண்டி ஒன்றினை வாடகைக்கு அமர்த்தியுள்ளார். அதனை அடுத்து அவரை ஏற்றுவதற்காக குறித்த முச்சக்கர வண்டி அப்பகுதிக்கு வந்துள்ளது.

அதன் போது , அப்பகுதியில் தரிப்பிடத்தில் நின்று முச்சக்கர வண்டி சேவையில் ஈடுபடுவோர், தரிப்பிடத்தில் நிற்கும் தமது முச்சக்கர வண்டியையே வாடகைக்கு அமர்த்த வேண்டும் என முரண்பட்டு, அங்கு வந்த முச்சக்கர வண்டி மீதும் நபர் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அதனை அடுத்து பாதிக்கப்பட்ட சாரதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்.நகரில் பேருந்து நிலையம் , வைத்தியசாலை மற்றும் புகையிரத நிலையம் போன்ற பகுதிகளில் நிற்கும் முச்சக்கர வண்டி சாரதிகள் அதிக கட்டணங்களை அறவிட்டு வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டி வந்தனர்.

அந்நிலையில் நீண்ட கால போராட்டத்தின் பின் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண மானிகளை பொறுத்துமாறும் அவ்வாறு பொறுத்தாத சாரதிகளை தரிப்பிடங்களில் நின்று சேவையில் ஈடுபட வேண்டாம் எனவும், மீறுபவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் யாழ்.மாவட்ட செயலர் அறிவித்து இருந்தார்.

அதனை அடுத்து ஒரு சில சாரதிகள் கட்டணமானிகளை பொருத்தி இருந்தாலும், சேவையில் ஈடுபடும் போது மானி பழுதடைந்து விட்டது என பொய் கூறி அதிக கட்டணமே அறவிட்டு வந்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் “பிக் மீ” செயலி தனது சேவையை அறிமுகப்படுத்தியதை அடுத்து மக்கள் பலரும் செயலியை பயன்படுத்த தொடங்கியமையால், தரிப்பிடத்தில் நின்று சேவையில் ஈடுபடும் தமக்கு பெரு நஷ்டம் ஏற்பட்டு உள்ளதாக தெரிவித்து வரும் நிலையில இன்றைய தினம் குறித்த தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (O1)

# பிள்ளைகளின் பசியாற்றுவதற்கு பப்பாசி திருடியவருக்குப் பிணை

பசியில் வாடிய தனது பிள்ளைகளுக்கு உண்ண கொடுப்பதற்காக மாற்றான் காணியில் மூன்று பப்பாசி பழங்களை திருடிய நபர் ஒருவர், தெய்யந்தர நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்பட்ட பின்னர், ஐம்பதாயிரம் பிணையும், சரீரப்பிணையில் செல்ல அவர் அனுமதிக்கப் பட்டத்துடன் நொவம்பர் 27 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாரும் பதில் நீதவான் பிரசன்ன கொடித்துவக்கு உத்தரவிட்டார்.

ஹக்மன பிரதேசத்தைச் சேர்ந்த சுதம் குமார என்ற நபருக்கே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சம்பிக்க கமகே, தனது பிள்ளைகளுக்கு பல நாட்களாக சரியாக உணவளிக்க முடியாத காரணத்தினால் இவ்வாறு அவர் பப்பாசி பழங்களை திருடியதாக நீதிமன்றில் தெரிவித்திருந்தார். (ரெ-24)

# மட்டக்களப்பில் ஆணின் சடலம்


மட்டக்களப்பு, நாவலடி கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருவெப்பங்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட 89 வயதுடைய உ.விஜயரத்ன என்பவரே நேற்று இரவு நாவலடி கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 11 மணியளவில் நாவலடியில் உள்ள தனது மகனின் வீட்டுக்கு வருகை தந்திருந்த இவர் மாலை வேளையில் காணாமல்போயிருந்த நிலையில் நாவலடி மயானத்துக்கு முன்பாக உள்ள கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைவாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரனை அதிகாரி த.தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன், பிரதே பரிசோதனைகளின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
Distance: 3.8 Km
Duration: 8 minutes
SEARCH NEAR VEHICLES
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2023இல் வெளியிடப்பெற்றது.